New Science Academy
Kannathiddy Jaffna.
DAY CLASS
Mon ——> Fri
Electricity — 8.30 A.m.
Properties of Matter — 10.30 A.m.
Electrostatics— 11.30A.m.
ஆரம்பம்:- 17-04-90.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New Science Academy
In Front, of B. M. C. Jaffna.
Botany 90A/L
★ Paper Class ★
Fy
திரு. செல்வநேசன்
த வர இராச்சியப்பிரிவு
களும் இனப் பெருக்கமும்
ஆரம்பம்:- 21-04-90
குறிப்பு:-
★ ஆரம்ப வகுப்புகளில் மாத்திரம் அனுமதிகள் வழங்கப்படும் ★

சுடர் 5: பிரமோதூத ஷு சித்திரை மீ 4 உ செல்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 20 (17-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 62

### யாழ். நகரில் இன்றுமுதல்

# கடைகள் இரவு 9 மணிவரை!

# பஸ்சேவை 10-30 மணிவரை!!

## விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 17

யாழ் நகரப் பகுதியில் உள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் இரவு ஒன்பது மணிவரை திறக்கப்படவேண்டும். பஸ்சேவைகள் இரவு 10. 30 மணிவரை நடைபெற வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் வலிகாமம் பகுதி இராணுவப் பொறுப்பாளர் திரு. கிளி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பஸ்சேவை தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயரதிகாரிகளுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் --

இரவு 10. 30 மணிவரை பஸ்சேவையை நடத்த போக்குவரத்துச் சபை உயரதிகாரிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பாகவும், மினிபஸ்களை யாழ் சிங்கள மகாவித்தியாலயம் இருந்த காணியில் நிறுத்துவது தொடர்பாகவும் பேசுவதற்காக விடுதலைப்புலிகளின் வலிகாமம் பொறுப்பாளர் திரு கிளி மினி பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளை இன்று சந்திப்பார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. (உ-9)

### கருத்து வேறுபாடுகளை களைய

## முஸ்லிம் காங் - ஈரோஸ் பேச்சுவார்த்தை நடக்கும்

முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஈரோஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் குறித்து பேச்சுக்கள் நடைபெற இருப்பதாக ஈரோஸ் செயலதிபர் திரு வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸில் உள்ள பழம் தலைவர்களால் தான் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. நாம் தலைமைப் பீடத்துடன் பேச்சு நடத்தியுள்ளோம். தொடர்ந்தும் பேச்சு நடத்தி சமரச நிலையை உருவாக்கமுயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்.

முஸ்லிம் மக்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எம்முடன் இணைந்து வாழ முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டுவருகின்றன.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

### அன்னை பூபதி நினைவாக

## வவுனியா நகரில் வியாழனன்று எழுச்சி தினம்

### நகரசபை மைதானத்தில் விழா

வவுனியா, ஏப் 17

அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியாவில் எழுச்சி தினம் கொண்டாடப்படவுள்ளது.

வவுனியா சிற்றூரவையினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ் எழுச்சி தினத்தன்று எழுச்சி ஊர்வலம், பேச்சு, கவிதைப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன.

விசேட அம்சமாக "மகாத்மா காந்தியா, அன்னை பூபதியா தியாகத்திற் சிறந்தவர்?" என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா சிற்றூர் அவையின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில், இராசேந்திரன் குளம், பூவரசங்குளம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை சிவன் கோவிலடியில் இரவு, பகல் நிகழ்ச்சிகள்

திருகோணமலை, ஏப் 17

அன்னை பூபதியின் நினைவாக நடத்தப்படும் உண்ணா விரதமும் எழுச்சி விழாவும் திருகோணமலை சிவன்கோவிலடியில் நடைபெற்றுவருகின்றன.

திருகோணமலை அன்னையர் முன்னணி, விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் இந்த எழுச்சி நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது.

பகல் வேளைகளில்உண்ணா விரதமும் இரவு வேளைகளில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுவருகின்றன.

அன்னையர் முன்னணியினர் பல்வேறு நிகழ்ச்சிகளை கிராமங்கள்தோறும் சென்ற 2ஆம் திகதிமுதல் நடத்தி வருகின்றனர். திரியாய், புல்மோட்டை, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, கோபாலபுரம்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

### 20 ஆம் திகதி முதல்

## சுயதொழில் வாய்ப்புக் கடன்

யாழ்ப்பாணம், ஏப். 17

சுயதொழில் வாய்ப்புக் கடன் வழங்குவதற்கான அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை வங்கிக் கிளைகளில் நடைபெற இருக்கிறது.

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவும் வகையில் இந்தக் கடன் பிணையுடன் வழங்கப்படும்.

ஒருவர் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 25 ஆயிரம் ரூபா வரை இந்தக் கடனைப் பெறலாம் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ரயில் தீப்பிடித்து 72பேர் பலி

பாட்னா, ஏப்ரல் 17

வட இந்திய நகரான பாட்னாவில் ரயில் ஒன்று நேற்று தீப்பற்றி எரிந்தது.

இரண்டு ரயில் பெட்டிகள் முற்றாக எரிந்தன.

இவ் விபத்தில் குறைந்தது 72 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஓட்டுவேலைக்குப் பயன்படுத்தப்படும் காஸ் சிலிண்டர் வெடித்ததன் காரணமாகவே ரயில் பெட்டிகளில் தீப்பற்றியது என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

# வட - கிழக்கை வளமாக்க வெளிநாடுகள் பல உதவும்

## தேர்தல் நடந்து புதிய அரசு வந்தால்

கொழும்பு, ஏப் 17

வடக்கு - கிழக்கு மாகாணத்தை வளமுடையதாக மாற்றுவதற்கு கோடிக்கணக்கான ரூபா பணத்தை உதவியாக வழங்க உலகநாடுகள் பலவும் காத்திருக்கின்றன.

மாகாணசபைக்குப் புதிகாகத் தேர்தல் நடந்து, புதிய நிர்வாகம் கையேற்ற 8 ஆம் மாதம் பெருந்தொகையான பணத்தை வழங்க அவை வாக்குறுதி அளித்துள்ளன.

இந்தத் தகவல்கள் அரசாங்கத்துடன் தொடர்புடைய வட்டாரங்களிலிருந்து தெரிய வந்தது.

அந்த வட்டாரங்கள் தந்த தகவல்களின் பிரகாரம் -

★ வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகம் ஈ. பி. ஆர். எல். எவ். வசம் இருந்தபோது 50 கோடி ரூபா பணமே வெளிநாடுகளில் இருந்து உதவியாகக் கிடைத்தது

★ ஆனால் உரிய முறைப்படி நடக்கும் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவாகும் புதிய மாகாண அரசிடம் ஆட்சிப் பொறுப்புச் சேர்ந்தால், அதன் பின்னர் ஏற்கனவே கிடைத்த உதவியை விட மிகப் பலமடங்கு பண உதவி கிடைக்கும் வாய்ப்புகள் இப்போதே தென்பட்டுள்ளன.

★ புதிய ஆட்சி பதவிக்கு வந்ததும் வேண்டிய நிதிஉதவி வழங்கத் தாம் தயாராக இருப்ப

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

செவ்வாய்க்கிழமை சித்திரை4
17-04-1990
சுபநேரம்:
10-34 முதல் 12 04 வரை
இராகுகாலம்
03-04 முதல் 04 34 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

### ★ 19 அம்சத் திட்டம்

# பேச்சுக்கு முன் நிபந்தனை அல்ல; அடிப்படையே! - ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. கடிதம்

கொழும்பு, ஏப். 17

"நாம் முன்வைத்திருக்கும் 19 அம்சத் திட்டம் பேச்சுக்கு முன் நிபந்தனை அல்ல பேச்சுக்கு ஓர் அடிப்படையே!"

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈ. பி. ஆர். எல்.எவ். வைச் சேர்ந்த எம் பி. திரு. கே. பிரேமச்சந்திரன்.

தோட்டத் தொழில்துறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா விடம் நேற்றுக் கையளித்த கடிதம் ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

"அரசாங்கத்துடன் பேச்சு நடத்த ஈ. பி. ஆர். எல்.எவ். விரும்பினாலும், பேச்சுக்கு அந்த அமைப்பு முன் நிபந்தனை விதித்திருப்பதால் அந்த அமைப்புடன் பேச்சு நடத்த அரசு தயாரில்லை" என்று அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா கடந்த வாரம் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் திரு. பிரேமச்சந்திரன் எழுதிய கடிதத்திலேயே "19 அமசத் திட்டம் பேச்சுக்கு அடிப்படையே!" என்று

(5ஆம் பக்கம் பார்க்க)

## பதில் அதிபர்கள் நியமனம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப் 17

பதில் அதிபர்கள் நியமனங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்று யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அவர் நேற்று அனுப்பிய சுற்று நிருபத்திலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கொழும்பில் அதிபர் நியமனம் தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுவதால், அதன் முடிவு வரும் வரை இந்த நியமனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அதே நேரம் இந்தக்காலப்பகுதியில் அதிபர் எவரும் இளைப்பாறினால், முழுப்பொறுப்பையும் சிரேஷ்ட ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## கப்பல் சேவை நடத்துவது குறித்து நாளை மாநாடு

### தலைமன்னாரில் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஏப் 17

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் செய்யவேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுவது சம்பந்தமான மாநாடு ஒன்று நாளை நடைபெற உள்ளது.

தலைமன்னார் துறைமுகத்தில் இந்த மாநாடு நடைபெறும்.

ரயில்வே, குடிவரவு - குடியகல்வு, சுங்க, பொலீஸ், கடற்படை, சுகாதார அதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய - இலங்கை அரசுகள் அமைதிப்படை வெளியேறிய பின் தங்களது நல்லுறவைப் பிரதிபலிக்கும் பொருட்டு இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் கூடிய கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

( 5ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் பாப்பரசர் வாழ்த்து!

வத்திக்கான், ஏப். 17

ஈஸ்டர் பண்டிகையின் போது பரிசுத்த பாப்பரசர் 55 மொழிகளில் வாழ்த்துக் கூறினார்.

அவற்றில் ஒன்று தமிழ் மொழி [உ-எ]

## வங்கி பாதுகாப்பு கடமைகளில் மீண்டும் பொலீஸார் ஈடுபாடு

யாழ்ப்பாணம், ஏப் 17

யாழ்மாவட்டப் பொலீஸார் நேற்று முதல் மீண்டும் வங்கிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

சில தினங்களுக்கு முன் பருத்தித்துறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து விடுதலைப் புலிகள் பொலிஸாரை கடமைக்குசெல்ல அனுமதிக்கவில்லை

மீறி சென்ற சிலர் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று முதல் பொலிஸார் வங்கிகளில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர் (இ-9)

## "வலம்புரி" சேவைஆரம்பம்

நெடுந்தீவு, ஏப். 17

நெடுந்தீவுச்சேவைக்கெனத் தருவிக்கப்பட்ட புதிய படகு வலம்புரி ஆடம்பரம் எதுவுமின்றி நேற்று திங்கட்கிழமை குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து தனது சேவையைத் தொடங்கியது

வடபிரதேச அத்தியட்சகர் திரு. எஸ். பாலேந்திரா சேவையை ஆரம்பித்து வைத்தார். [ஓ-11]

## மினிவான் குடைசாய்ந்து ஒருவர் பலி; 12 பேர் காயம்

### செம்மணிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ் நகரிலிருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினி வான் ஒன்று குடைசாய்ந்ததில் ஒருவர் மரணமானார் 12 பேர் காயமடைந்தனர்

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் யாழ் செம்மணி மயானத்துக்குச் சமீபமாக இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலியானவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது இறந்தவர் மினிவானின் நடத்துனர் எனச் சொல்லப் படுகிறது

காயமடைந்தவர்கள் பெயர், விவரம் வருமாறு:-

தியாகராசா சுசிந்தர்(வயது 12) சைதடி நுணாவில். வி. சண்முகம்பிள்ளை (வயது 70)

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு திறக்கும் நேரம்

17 04 1990
ஸஹர் முடிவு 4 28
நோன்பு திறக்கும் நேரம் 6-19

## ரூ. 60 லட்சம் கடத்தலுக்கு 1 கோடி 40 லட்சம் அபராதம்!

கொழும்பு, ஏப் 17

புத்தாண்டு தினத்தன்று 60 லட்சம் ரூபா தங்கத்தை கடத்திவந்தபோது கட்டுநாயக்காவுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு நபர்களுக்கு சுங்கத் திணைக்களம் ஒரு கோடி 40 லட்சம் ரூபா அபராதமாக விதித்துள்ளது (உ-எ)

### முச்சந்தி முரளி



குடாநாட்டிலை வாகன விபத்துக்கள் நடக்காத நாளே இல்லை எண்டு சொல்லுங்கோ...'

## உணவு நஞ்சாகி 64 பேர் பலி!

லக்னோ, ஏப் 17

உத்தரப் பிரதேசத்தில் ராய்ப்பூர் என்னுமிடத்தில் உணவு நஞ்சாகியதால் 64பேர் உயிரிழந்தனர் 69 பேர் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

திருமண விருந்து ஒன்றில் கலந்து கொண்ட 140 பேர்களுக்கே இக்கதி ஏற்பட்டது. (ஒ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சவூதியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஜெனரேட்டர்கள் டீசல் என்ஜின்கள் வேறு பல பொருட்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு யூனிவேர்சல் சேவிஸர், 15, ஆடியபாத வீதி, கல்வியங்காடு. (சந்தியில் இருந்து 100 யார் தூரம்) (3307)

### கோழிக்குஞ்சுவிநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [பிலிமத்] சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3202)

Hyline வெள்ளை, சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு(புலிமத்) சேவற் குஞ்சுகள் 17-4-90 (செவ்வாய்க்கிழமை) யும் Golden Com-et பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் 18-4-90 புதன்கிழமையும்விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (3267)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

கறுப்பு (பிலிமத்) சேவல் குஞ்சுகள் (17-4-1990) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [3264]

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### தேவை

ரூறிஸ்ட் ஹோட்டலுக்கு பார் கீப்பர், சமையல் ஆள், உதவியாளர், வெயிற்றர் உடன் தேவை. சவோய் ரூறிஸ்ட் ஹோட்டல். கிரிமலை றோட், (K.K.S சந்தியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில்) (3269)

### உடன் தேவை

டைப்பிறீசர் தேவை. தொடர்பு கொள்ளவும் Raja Cool Bar சுன்னாகம் பஸ் நிலையம் முன்பு (துர்க்கா அருகாமை) (3268)

### விபரம் தேவை

C. 90, 87 Sri 3580 இலக்க மோட்டார் சைக்கிளின் தற்போதைய உரிமையாளர் குட்டி இராமதாஸ் அல்லது இராமச்சந்திரன் என்பவருடைய விபரங்கள் தேவைப்படுவதால் தயவு செய்து தொடர்புகொள்ளவும், முகாமையாளர் K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. [12926]

### நெசவாளா தேவை

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள பெண் நெசவாளர் உடன் தேவை. நேரில் வரவும். யூனியன் பவர்லூம் 190ம் கட்டையடி, நுணாவில் சாவகச்சேரி. [3245]

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (வி/4209)

# யாழ். இந்து இன்னிங்ஸ் வெற்றி
# ஜெயராஜ் 2 ஆவது "செஞ்சரி"

யாழ்ப்பாணம் ஏப் 17

மானிப்பாய் இந்துக்கல்லூரியுடனான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிஇன்னிங்ஸ்ஆல் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் யாழ் இந்துவின் அணித்தலைவர் ஜெயராஜ் தனது இரண்டாவது "செஞ்சரி" ஐப் பெற்றது குறிப்பிடத் தக்கது. இதில் அவர் 2 "சிக்சர்" களையும் 11 "பவுண்டறி" களையும் அடித்து ஆட்டமிழக்காது இருந்தார்.

முதலில் ஆடிய, மானிப்பாய் இந்து அணியினர் 117 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். சிறீகுமார் 21, பிரபாகரன் 19, கணன் 17, திலக்ராஜ் 16, ஓட்டங்களைப் பெற்றனர். பிரதீபன் 5 விக்கெட்டுக்களையும், துவாரகன், நரேந்திரன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ். இந்து அணியினர் 5 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயராஜ் ஆட்டமிழக்காமல் 106, பிரபாகரன் 45, கபிலன் 30, கோபிராஜ் 25, ராஜசேகரம் 16 ஓட்டங்களைப் பெற்றனர். திலக்ராஜ் 3 விக்கெட்டுக்களையும், பிரபாகரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய மானிப்பாய் இந்து அணியினர் தமது 2 ஆவது இன்னிங்சில் 125 ஓட்டங்களைப் பெற்றனர். சிறீகுமார் 43, ஜெயகாந் 24, கெங்காதரன் 16, குலேந்திரராஜ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாகரன், சசிசேகரன், இருவரும் மும்மூன்று விக்கெட்டுக்களையும், வரதன், நரேந்திரன், பிரதீபன் மூவரும் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (க-மு)

## ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, ஏப்ரல் 17 யாழ்ப்பாணத்தில் மே முதலாம் திகதி திறக்கப்பட இருந்த பனங்கைத் தொழிற் பொருட்காட்சி ஜூலை 6 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப் பட்டுள்ளது. (க-120)

## நீர்வேலியில்

கோப்பாய் ஏப் 17

நீர்வேலி கந்தசுவாமி கோவில் முன்றலில் அன்னை பூபதியின் நினைவாக நேற்று திங்கட்கிழமை அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

அன்னை பூபதியின் படங்கள் நீர்வேலி எங்கும் வைக்கப்பட்டு தோரணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

எழுச்சிக் கீதங்களும் ஒலிக்கப்பட்டன. (இ-72)

முல்லை மாவட்டம்

# வீடமைப்பு விண்ணப்பங்களை 20க்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புனர் வாழ்வு புனரமைப்புத் திட்டத்தில் வீடமைப்பதற்கான உதவித் தொகை பெறுவோரின் பட்டியலில் இடம் பெற்றோர் அதற்கான விண்ணப்பப் பத்திரத்தை இம் மாதம் 20 ம் திகதிக்கு முன் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர் ஊடாக முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தை குறித்த திகதிக்கு முன் சமர்ப்பித்தவர்கள் மே மாதம் 25 ம் திகதிக்கு முன் கட்டட வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. . பொன்னம்பலம் தலைமையில் இடம் பெற்ற மாவட்ட புனரமைப்பு கூட்டிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானம் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் பொருந்தும்.

இவ்வித நடவடிக்கைகளை மேற் கொள்ளத் தவறுவோர் வீடமைப்பதற்கான உதவி பெறுவோர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் இது மேலும் நீடிக்கப்படமாட்டாதெனவும் முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரீ. எம். விஜயகுமார் உதயனுக்குத் தெரிவித்தார். (க-94)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பி. ஜெயராசா (குஞ்சு)

தோற்றம்: 31 - 03 - 1940 மறைவு: 04 - 05 - 1983

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வளமுடன் வாழ வழி வகுத்து எம் நெஞ்சங்களில் அழியா ஓவியமாய் நிறைந்திருக்கும் எம் இல்லங்களின் மணிச்சுடரே நீங்கள் மறைந்து ஏழு ஆண்டு சென்றாலும் உங்களது கம்பீரத்திருவுருவமும் கணீரென்ற குரலும் எங்கள் நினைவுகளின் தொடர் கதை ஐயா!

மனைவி, மக்கள், தாய், சகோதர சகோதரிகள்.

யோன்ராச வீதி, அச்சுவேலி. [3310]

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணர்

(பத்தர் அவர்கள்)

அன்னையின் மடியில்: 09 - 11 - 1920 ஆண்டவன் அடியில்: 09 - 05 - 1988

திதி: 17 - 04 - 1990

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்"

அன்புத் தெய்வம் 'ஐயா' ஆண்டவன் பாதங்களை அரவணைத்து ஆண்டுகள் இரண்டு ஆகின்றன. உங்கள் நினைவுகளை நெஞ்சிலே சுமந்து - நீங்கள் ஆற்றிய பணிகளைத் தொடருவோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி, தெல்லிப்பளை. (12908)

வடபகுதியில்

# பாடசாலை வீரர்களுக்கு விசேட கிரிக்கெட் பயிற்சி!

## கல்வித்திணைக்களம்ஏற்பாடு

திருகோணமலை ஏப் 17

வடபகுதியில் உள்ள பாடசாலைகளின் திறமையான கிரிக்கெட் வீரர்களுக்கு எதிர் வரும் அக்டோபர் மாதத்தில் விசேட கிரிக்கெட்பயிற்சி வழங்கப்படும்.

இதற்காக வதிவிட கிரிக்கெட் பயிற்சி முகாம்ஒன்றை நடத்தகல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தத் தகவலை வடக்கு, கிழக்கு மாகாணகல்வி அமைச்சின்செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி முகாம் ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும் -

இலங்கையின் பிரபலமான கிரிக்கெட் பயிற்சியாளர்களினால் செயன்முறை மற்றும் போதனைமுறை பயிற்சிகள் வழங்கப் டும் என்றும் -

இப் பயிற்கி முகாமை நடத்துவதற்கு வடபகுதியில் உள்ள பிரபல நிதி நிறுவனம் ஒன்று நிதி உதவி வழங்க முன் வந்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

இதேபோன்று பாடசாலை வீரர்களுக்காக மட்டக்களப்பில் கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாமும், திருகோணமலையில் உதைபந்தாட்ட பயிற்சி முகாமும் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-9)

# உலக தமிழர்மருத்துவ கல்லூரி இலங்கையில் நிறுவ வேண்டும்

## தமிழர் பண்பாட்டு இயக்க ஒன்று கூடலில் உரை

மொரீசியஸ் நாட்டில் தமிழ் கலாசாரத்தைப் பேணுவது விரிவுபடுத்தப் பட்டுள்ளது. உலகத் தமிழர்களைத் தமிழ்க் கலாசாரம் ஒன்றிணைக்கின்றது.

பொருளாதார ரீதியில் ஒன்று கூடிச் செயற்பட்டு, உலகத் தமிழர் மருத்துவக் கல்லூரி ஒன்றை இலங்கையில் நிறுவ நாம் முன்வர வேண்டும்.

அண்மையில் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஒன்று கூடலில் உரையாற்றிய போது திரு.ஐ.தி. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் உபதலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைக் கிளை உறுப்பினர்களான திரு. இரா. கனகரத்தினம், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. இ. தவகோபால் ஆகியோர் தலைமைச் செயலகத்தினால் பாராட்டப்பட்டு பட்டமளிக்கப்பட்டமைக்காக இந்த ஒன்று கூடல் நடத்தப்பட்டது.

திரு. பொன். பூலோகசிங்கம் கலாநிதி இ. பாலசுந்தரம் திரு. எஸ். பி. கிருஷ்ணன், திரு. எம் எஸ். சிவப்பிரகாசம், திரு. சிவ. ஆறுமுகசாமி, வைத்தியக்கலாநிதி இ. சற்குருநாதன், திரு. இரா. கனகரத்தினம், திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. இ. தவகோபால், செல்வி றஞ்சனி உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இணைச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன் நன்றியுரை கூறினார். (இ-3)

## தையல் வகுப்பு

தொழிற்திணைக்களத்தால் நடத்தப்படும் தையற் பயிற்சி வகுப்பு இவ்வாண்டும் வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைத் தொகுதிக்கான இத் தையற் பயிற்சி வகுப்பு கடந்த வருடம் வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை மேற்குப்பகுதியில்நடைபெற்று வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும்

## விடுதலைப் புலிகள் பிரமுகர் கோருகிறார்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

இப்படி கோரிக்கை விடுத்தார் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பிரமுகர் திரு க. சிவபாலன்.

கூட்டுறவாளர் கலந்துரையாடலில் பேசுகையிலேயே அவர் இப்படிக்கூறினார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல ப. நோ. கூ. சங்கங்களுக்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டேன். அதன் அடிப்படையில் பார்க்கும் போது கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்று அவர் கூறினார்.

பெரும்பாலான சங்கங்கள் கொள்வனவு அதிகாரியிடமே சகலவற்றுக்கும் தங்கியுள்ளன அதுதான் ஊழல் இடம்பெற வழி வகுக்கிறது. அந் நிலை மாற்றப்பட வேண்டும் என்றார் அவர். [இ-3]

# 16 வயதுக்கு உட்பட்டோரை வேலைக்கு அமர்த்தமுடியாது

## சட்டமூலம் வரும் என்கிறார் லலித்

பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுவர், சிறுமியர் வேலைக்கு அமர்த்தப்படுவது தடை செய்யப்படும்.

மாணவர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் தடை விதிக்கப்படும்.

இதற்கான சட்டங்களைக் [illegible]

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

கல்கிசை பௌத்த பாலிக வித்தியாலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார். (உ-எ)

## கப்பல் வேலைவாய்ப்புக்கள்

வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.

1. இரண்டாவது ஒப்பிசர்
2. மூன்றாவது ஒப்பிசர்
3. மூன்றாவது இன்ஜினியர்
4. கப்பல் மின் இணைப்பு முகாமையாளர்
5. ஒயிலர்
6. A. B,
7. கிளீனர் Wiper
8. டெக் போய்

ஒரிஜினல் C. T. C புத்தகம் உள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அனுபவமில்லாதவர்களும் நேரில் வரலாம்.

### இத்தாலி

இத்தாலிக்கு கப்பல் மூலம் செல்ல விரும்புவோர் 20 - 04 - 90 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

கனடா, ஜெர்மன், கொலன்ட், சுவிஸ் செல்ல விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

ஒரிஜினல் விசா, பாஸ்போட்டுடன் 35 நாட்களுக்குள் அனுப்பி வைக்கப்படும்.

### சிங்கப்பூர், டுபாய்

வீட்டுப் பணிப்பெண்கள் தேவை

விரும்பியவர்கள் பாஸ்போட்டுடனும், 6 கலர்ப் படங்களுடனும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சிவா வாச் வேக்ஸ், 185, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,

ந. சிவநாதன், 66/6, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(12326)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி நளினி இராஜபக்ஸ்சா

(புனித மரியாள் வித்தியாலயம் 4ஆம் ஆண்டு மாணவி)

தாயின் மடியில்; 24 - 01 - 1979 இறைவனின் மடியில்: 17 - 04 - 1989

எங்கள் அன்புச் செல்வமே நளினி எத்தனை காலங்கள் பிரிந்தாலும் உன் நினைவு எங்களை விட்டு பிரியாதம்மா

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, அம்மம்மா, சுவிஸ் பெரியமாமா, சுவிஸ் சின்னமாமா, சித்தப்பா, சித்தி.

64, கெனடி றோட், நாவாந்துறை வடக்கு, [12325]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

**பொருள்:**
அழகிய மாமை நிறம் உடைய இவளுடைய தழுவுதல், ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவர்க்கும் இனிமை உடையதாகும்-

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
17 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

# கடல் வழி எரிபொருள்

நாட்டு நிலைமை இப்போது எவ்வளவோ சீரடைந்துவிட்டது. குறிப்பாக தமிழ்ப்பகுதிகளில் சுமுக நிலை, அமைதிச் சூழல், இயல்பு நிலை நிலவுகிறது. ஆயினும் நெருக்கடியான காலங்களில் நிகழ்ந்ததுபோல, யுத்தம் நடந்த வேளைகளில் ஏற்பட்டதுபோல, இப்போதும் அடிக்கடி எரிபொருள் தட்டுப்பாடு உண்டாகிறது. உதாரணமாக கடந்த வாரத்தில் வடக்கு கிழக்கில் எரிபொருள்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அது பல பகுதிகளில் தட்டுப்பாடாகவும் மாறி இருக்கிறது.

சுமார் ஏழு, எட்டு வருடங்களின் பின்னர், மக்கள் புதுவருடத்தை மனப் பயமின்றி, பூரண விருப்பத்துடன் கொண்டாட எதிர்பார்த்திருந்த வேளை, எரிபொருள் தட்டுப்பாடு அதற்குக் குந்தகம் விளைவித்தது எனலாம். எரிபொருள் தட்டுப்பாடு, விலை உயர்வாக மாற, அந்த விலை உயர்வு மக்களின் ஏனைய செலவினங்களை உயர்த்தும் என்பது எவரும் அறிந்த வாய்ப்பாடு.

முன்னர் ரயில் சேவை சீராக நடக்கவில்லை. அதனால் எரிபொருள்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு உண்டாயிற்று. அதனை எவரும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக, புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் தட்டுப்பாடு மக்களின் வாழ்க்கைச் செலவுப் பளுவை அதிகரிக்கும். தமிழ்ப்பகுதிகளில் பொருளாதார, வர்த்தகத்துறைகளை நலிய வைக்கும். ஆகையால் எரிபொருள்களையும், ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் கடல் மார்க்கமாக இங்கு கொண்டு வரவேண்டும் என்று இப்பத்தியில் "தட்டுப்பாடு ஒரு சாபக்கேடா" என்ற தலைப்பில் 89ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதியன்று ஆலோசனை கூறியிருந்தோம்.

இப்போது ரயில் சேவைகள் சீரடைந்து விட்டன. எனினும் எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, தடுக்க முடியாமல் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. உண்மையில் அதுதிண்டாட்டநிலையே ரயில்வேப் பகுதியிடம் எரிபொருள்களை ஏற்றிவரப் போதிய 'வகன்'கள் இல்லை. அதனால் எரிபொருள்களை கடல்மார்க்கமாக எடுத்துவர ஆலோசிக்கப்படுவதாகத் தகவல் வெளியாகி உள்ளது

எரிபொருள்கள் இங்கு உற்பத்தியாகவில்லை. இறக்குமதி செய்யப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து கடல்மார்க்கமாக கொழும்பு வரும் எரிபொருள்கள் பின்னர் தமிழ்ப் பகுதிகளுக்குத் தரை மார்க்கமாகவே அனுப்பப்படுகின்றன. அதனால் தான் தரைப் போக்குவரத்து தடங்கலாகும் போதோ அல்லது சீரற்றுப்போகும் போதோ இப்பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு உண்டாகிறது. ரயில்வே பகுதியின் 'வகன்' பற்றாக்குறையும் எரிபொருள் விநியோகத்தைப் பாதிக்கிறது.

இந்தப் பாதிப்பும், பற்றாக்குறையும் இருந்துவிட்டு எப்போதோ ஒருமுறை வருவதல்ல. அடிக்கடி வருகிறது. ஆகவே இது நீண்டகால நோக்குடன் தீர்க்கப்பட வேண்டியது: அணுகப்பட வேண்டியது; மாற்றுவழி காணப்பட வேண்டியது.

திருகோணமலையில், சீனன்குடாவில் உள்ள எண்பதுக்கும் மேற்பட்ட குதங்கள் பாவிக்கபடாமல் உள்ளன. அவற்றை வெளிநாடுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து வருவாய் தேட முன்னர் வகுத்த திட்டமும் நிறைவேறவில்லை.

அந்தக் குதங்களைப் பயன்படுத்துவதனால் இலங்கைக்கு ஒருவருடத்துக்குத் தேவையான எரிபொருள்களை விட அதிக அளவைத்தேக்கி வைக்க வேண்டும் என்பது புள்ளிவிவரம். அதற்கான பணத்தை முற்கொண்டே செலுத்தக்கூடிய நிதிநிலை இலங்கைக்கு இல்லை என்பதால் அவற்றைப் பாவிப்பது பற்றி நினைக்க முடியாது எனக் காரணம் காட்டப்படுகிறது.

எனினும், சீனன்குடா குதங்களில் ஒரு பகுதியையாவது பாவித்து, எரிபொருள்களை அங்கு சேமித்து, கொழும்பு உட்பட சகல பகுதிகளுக்கும் கடல் மார்க்கமாக அனுப்பலாம். இது ஏற்றி இறக்கும் செலவையும் பெருமளவில் குறைக்கும்.

நாட்டின் சிறுதுறைமுகங்களை - இறங்குதுறைகளை- அபிவிருத்தி செய்தால் எரிபொருள்களை மட்டுமன்றி ஏனைய உணவுப் பொருள் உட்பட்ட முக்கிய பாவனைப் பொருள்களையும் கடல்மார்க்கமாக ஏற்றி இறக்கலாம். குறிப்பாக வடக்கு -கிழக்கில் கரையோரத் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். புதியவை நிர்மாணிக்கப்படவேண்டும்.

எதற்கும், முதலில் எரிபொருள்களைக் கடல்மார்க்கமாக ஏற்றி இறக்குவதை வெறும் ஆலோசனையாகவோ, கடதாசியில் எழுதிய சுரைக்காயாகவோ குளிர் உறைய வைக்காமல் உடனடியாகச் செயல்வடிவம் கொடுக்க வேண்டும்

# புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் பிச்சைக்காரர் கைதாகின்றனர்

கொழும்பு, ஏப்ரல் 13
நாட்டில் பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றை சமூக நலன்துறை அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது.

மாவட்டங்கள் தோறும் உள்ள பிச்சைக்காரர்களை கைது செய்து அவர்களை புனர்வாழ்வு நிலையங்களில் வைத்து பயிற்சி அளிப்பதே புதிய திட்டம் ஆகும்.

இதன் முதல் கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் இதுவரை 2-ஆயிரம் பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டு கங்கொடவில, ரிதியகம ஆகிய இடங்களில் உள்ள புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ - 2)

# ஒப்பந்தகாரர்கள் இல்லாததால் அபிவிருத்தி வேலைகள் பாதிப்பு

## முல்லைத்தீவு அரச அதிபர் கவலை

புதுக்குடியிருப்பு, ஏப்.17
எமது திணைக்களங்களில் அபிவிருத்தி வேலைகளுக்கென போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றை நிறைவேற்றுவதற்குஒப்பந்தகாரர்கள் முன்வருகிறார்கள் இல்லை. இதனால் அபிவிருத்தி வேலைகள் தாமதம் அடைகின்றன.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்ததாவது;

ஒதுக்கப்படும் நிதி அந்த ஆண்டிலேயே செலவிடப்பட வேண்டும் தவறினால் அந்த நிதி வேறு திணைக்களத்திற்கு அல்லது வேறு மாவட்டத்துக்கு செல்லும் வாய்ப்புக்கள் உண்டு.

இதனால் இம் மாவட்டத்தின் அபிவிருத்தி பின்தள்ளப்படலாம். இந்த நிலை தொடர்ந்தால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இம்மாவட்டத்தில் ஓர் சம நிலையற்ற தன்மை ஏற்படும்.

எனவே இதற்கான காரணம் என்ன என்பதை பொது மக்களாகிய நீங்களே ஆய்வு செய்யவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-126)

### மரணம்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கந்தையா முருகானந்தன் (வயது 25) என்பவர் நேற்றுக் காலை மிருசுவிலில் தனியார் பஸ்ஸினால் மோதுண்டு மரணமானார் (இ-72)

### கவிதைப் போட்டி முடிவுகள்

தமிழ், சிங்களபுத்தாண்டை ஒட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு முடிவுகள் பின்வருமாறு:

முதல் இடம்: அரியாலையூர் வே. ஐயாத்துரை, இரண்டாம் இடம்: நாக - பரமசாமி, மூன்றாம் இடம்; த. பரமலிங்கம்.

யாழ்- இந்து மகளிர் கல்லூரியில் 15 ஆம் திகதி ஞாயிறு மாலை நடைபெற்ற விழாவில் யாழ்- அரச அதிபரின் மனைவி திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்களை வழங்கினார். (க - 51)

### நினைவில் இன்று

17-4-1990

● மின்னல் மின்சாரமாம் என்பதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்ளின் நினைவு தினம்.
பிறப்பு: 17-1-1705
இறப்பு: 17-4-1790

## சனிப் பெயர்ச்சி

முப்பது வருடங்களுக்கொரு முறை சூரியனைச் சுற்றி வரும் சனிக்கிரகமானது ஒவ்வொரு இராசியிலும் இரண்டரை ஆண்டுகள் தரித்துச் செல்லுமென்பது யாவருமறிந்ததே. இந்தச் சனிக்கிரகம் இப்போது தனுராசியில் இருக்கிறதா அல்லது மகர ராசிக்கு மாறிவிட்டதா என்பது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கிறது.

இந் நாட்களில் அதிகாலையில் கிழக்கு வானில் மிகவும் பிரகாசமாகக் காட்சியளிப்பது சுக்கிரன். சுக்கிரனுக்கு தென்மேற்கே ஏறத்தாழ இருபது பாகையளவில் ஒரு நட்சத்திரம் போலத் தெரிவதே சனிக்கிரகமாகும். ஆகாயத்தில் இராசிக் கூட்டங்களுக்கிடையே ஓர் எல்லைக்கோடு இல்லையாதலால் சனி மாறிவிட்டதா இல்லையா எனத் திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கிறது. எனினும் சில நிகழ்வுகளைக்கொண்டு நாம் ஓரளவில் இதைக் கண்டு கொள்ளலாம்.

நாளை (புதன் கிழமை) உத்தராட நட்சத்திரமாகும். இன்றிரவு 7.15க்குஉத்தராடம் ஆரம்பிப்பதால் இரவு 1 30 மணியளவில் அதன் முதற்கால் முடிந்துவிடும். அதன்பின் உத்தராடம் பின் முக்கால் அதாவது மகரராசியாகும். அப்படியானால் நாளை சந்திரன்மகரராசியில் இருப்பான் என்பது பொருள். எனவே நாளை புதன் கிழமை காலை நாலரை அல்லது ஐந்து மணியளவில் கிழக்கு வானில் சந்திரனிருக்குமிடத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சனி என்ன இராசியில் இருக்கிறதென்று நாமே கணித்துக் கொள்ளலாம்.

நாளைக்காலை முகிற் கூட்டங்கள் கிழக்கு வானில் நின்று நாம் இதைப் பார்க்க முடியாமற் போனால் எதிர் வரும் தை மாதம் வரை ஒவ்வொரு மாதமும் வரும் உத்தராட நட்சத்திரத்தில் நாம் இதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

டபிள்யூ. எஸ். செந்தில் நாதன்,
தலைவர், யாழ் வானியற் கழகம்.

### முத்தமிழ் நிகழ்ச்சி

குருநகர், ஏப்ரல் 17
கிறிஸ்து உயிர்ப்பு விழா இயல், இசை, நாடக முத்தமிழ் நிகழ்ச்சி கொழும்புத்துறை மணிப்புரி கலை அரங்கில் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றது. (க - 51)

### பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப் 17
மேசைப் பந்தாட்டம்பழகுவோருக்கான பயிற்சி வகுப்புகள் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நாளை 18 ஆம் திகதி ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப் பயிற்சி தினமும் காலை 9-00 மணிமுதல் 12 மணி வரை நடைபெறும்.

பிரதம பயிற்றுனராக திரு. பி. சிவபாதசுந்தரம் கடமையாற்றுவார். (மு)

### கால் நடைகள் மரணம்

கோப்பாய், ஏப் 17
கோப்பாய் கிழவானை பகுதியில் கால்நடைகள் புதுவிதமான நோயினால் பீடிக்கப்பட்டு இறந்து வருகின்றன என்று இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். சுமார் நூறு கால்நடைகள் இதுவரை இறந்துள்ளன. (இ-72)

### சந்நியாச தீட்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஸ்ரீராம கிருஷ்ண ஜெயந்தியன்று துறவியானார்.

வியாபாரி மூலையைச் சேர்ந்த திரு. சிவஞானப் பிரகாசத்தின் மகனான இருவருக்கு கல்கத்தா ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி பூதேஷானந்தரினால் சந்நியாச தீட்சை அளிக்கப்பட்டு, சுவாமி ரீட்டமயானந்தா என்னும்திருநாமமும் வழங்கப்பட்டது. (க-7)

# வெளிநாட்டுப் புலமைப்பரிசில் முடிவு அடுத்தசில தினங்களில்

கொழும்பு ஏப் 17
வெளி நாட்டுப் புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இம் மாதம் 20 ஆம் திகதியின் பின் முடிவுகள் அறிவிக்கப்படும். வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களுக்காக விண்ணப்பித்தவர்களுள் தகுதியானோருக்கான நேர்முகப்பரீட்சைகள் தற்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

புலமைப் பரிசில்களுக்காக மூவாயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்தன. இதில் 400 பேருக்கே நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 15 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கே தற்போது நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஏ க்கு 5 புள்ளியும், பி க்கு 4 புள்ளியும், சி க்கு 3 புள்ளியும், எஸ்சுக்கு 2 புள்ளியும் என்ற அடிப்படையில் 15 புள்ளிகளுக்கு மேல்பெற்றவர்களுக்கு புலமைப் பரிசில்களை பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேர்முகப்பரீட்சைகளின் முடிவுகளுக்கு ஏற்ப இவர்கள் இந்தியா, கனடா, அமெரிக்கா, ஜப்பான், ஹங்கேரி, ரஷ்யா, முதலிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். மாணவர்களின் தெரிவுகளை துரிதப்படுத்தும் படி இந்நடுகள் காலக்கெடு விதித்துள்ளதால் அடுத்த சில தினங்களில் விவரங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-2)

# கிராம மட்ட பொது நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## வவுனியா அரச அதிபர் உரை

வவுனியா, ஏப் 17
தற்போதைய சமூக சூழல் மாற்றங்களுக்கு ஏற்புடையதான மாவட்ட பொருளாதார மேம்பாட்டுக்காக கிராம மட்டத்திலான பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி, மாதர் அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களின் கருத்தரங்கில் உரையாற்றிய வவுனியா அரசாங்க அதிபர் கு. செ. பத்மநாதன் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு வீ. குமாரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராமிய பொது நிறுவனங்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அடிமட்டத்திலான அபிவிருத்திச் செயற்பாடுகளை எவ்வாறு வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அங்கு பேசிய அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்ததாவது;

அபிவிருத்தி என்பது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்னின்று உடனடி நிவாரணங்கள் உதவிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதல்ல. இருக்கின்ற வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி அதன் மூலம் அபிவிருத்தியடைய முயற்சிக்க வேண்டும்.

பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகளாலேயே இன்று மக்கள் தமது அபிவிருத்திக்கான தலைமைத்துவத்தை நம்பியிருக்கின்றார்கள். எனவே பாரிய பொறுப்பு மிக்க நீங்கள் உங்களது கடமைகளை மிகவும் பொறுப்போடு செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார். இக்கருத்தரங்கில் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ்.ரங்கராஜன், உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் மற்றும் விவசாய திணைக்கள கால்நடை அபிவிருத்தி பகுதி அதிகாரிகளும் உதவி அரசாங்க அதிபர் திருமதி ஈ. அற்புதராஜாவும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (இ-164)

## ஏழ்மையின் ஏற்றம்




ஒரு முறை, பெருமானார் (ஸல்) அவர்கள் 'இறைவா! என்னை ஏழையாக வாழச் செய்வாயாக! ஏழையாகவே மரணிக்கச் செய்வாயாக! (மேலும், மறுமையில்) என்னை ஏழைகளின் குழுவில் எழுப்புவாயாக! "என்று பிரார்த்தனை செய்தார்கள், அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் "நாயகமே! ஏன் இவ்வாறு பிரார்த்தனை புரிகின்றீர்கள்?" எனக் கேட்க பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ஏழை மக்கள் தங்களது சீமான்களை விட நாற்பது வருடம் முன்னதாகச் சுவர்க்கத்தில் நுழைவார்கள். ஆயிஷா! யாசகம் புரியும் ஏழைக்கு ஏதேனும் கொடுக்காமல் திருப்பி அனுப்பாதே! பேரீச்சம் கனியின் ஒரு துண்டையாவது கொடுத்து அனுப்புவாயாக! ஏழை மக்களுடன் அன்பாக இருப்பாயாக! அவர்களை நெருக்கமாக்கிக் கொள்வாயாக. மறுமை நாளில், அல்லாஹ் உன்னைத் தனக்கு நெருக்கமானவர்களில் [illegible] வான்" ([illegible])

## வாசகர் திருமுகம்

### கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை

"பீனிசம் நோய்க்கு ஆயுர்வேத மருந்து" என்னும் தலைப்பில் 9-4-1990 இல் பிரசுரமாகிய தங்கள் பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தி குறித்து நாம் சில விளக்கங்களை கொடுக்க விரும்புகின்றோம்.

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையானது யாழ்/பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களிற்கென 1987 ஆம் ஆண்டில் போதனா வைத்தியசாலை என அங்கிகரிக்கப்பட்டு தற்போது போதனா வைத்தியசாலைக்குரிய அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு செயல்முறைப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே கைதடி போதனா வைத்திய சாலைக்கும் வேறு எந்த தனியார் நிறுவனங்களிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

சு. சுரேசன்
செயலாளர்,
சித்த மருத்துவ மாணவர்,
சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

### தொற்று நீக்கப்படுமா?

கடந்த வருடம் கோமாரி நோயினால் பல காட்டுப் பன்றிகள் விசுவமடுக்குளக் கரையில் இறந்து கிடந்தன. இவை உரிய முறையில் அடக்கம் செய்யப்படாமையால் மழைபெய்தபோது இச் சடலங்கள் குளத்துக்குள் அடித்துச் செல்லப்பட்டன.

குளத்து நீரில் இவை அழுகியதால் இந் நீர் நோய்க் கிருமிகளின் தொற்றலுக்குட்பட்டுள்ளது. இந் நீரைப் பல குடும்பங்கள் பயன் படுத்துவதால் நீரைப் பரிசோதித்து தொற்று நீக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

இ. சோமசுந்தரம்,
சேமமடு.

### முல்லைத்தீவு பஸ்சேவை

முல்லைத்தீவில் பஸ் சேவை மிகவும் மோசமானதாக உள்ளது.

மாங்குளம் சென்று ரயில் மூலம் கொழும்பு செல்பவர்களும் திரும்பி வருபவர்களும் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு இணைப்பு பஸ்கள் சரியான நேரத்துக்குக் கிடைப்பதில்லை.

முல்லைத்தீவு மக்களுக்கு முழுமையான சேவையை நடத்த 25 பஸ்கள் தேவையான இடத்தில் தற்பொழுது 11 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன என அறியப்படுகின்றது.

இந்த பஸ் சேவையை கூடிய விரைவில் சீர் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

அ. குமாரசுவாமி,
ஒட்டுசுட்டான்.

## கண்டதும் கேட்டதும்

கடந்தவாரம் யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒரு காட்சி ஆச்சரியப்படத்தக்க காட்சி.

வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதேசத்தின் கல்வி நிர்வாகம் சம்பந்தமான உயர் அதிகாரிகள் எல்லோரும் ஒரே மேசையில் அமர்ந்திருந்து, சினேகபூர்வமாக சிரித்துப் பேசி நிர்வாக திட்டங்கள் பற்றி கூடி ஆலோசித்துக்கொண்டிருந்ததுதான் ஆச்சரியமான விடயம்.

கடந்த காலங்களில் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டத்திலேயே எவ்வளவு இழுபறியும், குத்துவெட்டுகளும், காலை வாரி விடுதலும் இடம் பெற்றன என்பது கல்வியுடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் தெரிந்திருக்கும்

இப்போது மாகாண உயர் அதிகாரிகளும் மத்திய அரசின் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளும் ஒரே மேசையில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசி குலாவுவது என்றால் அது எவ்வளவு ஆச்சரியப்படத்தக்க விடயம்?

இன்னொன்றையும் இங்கு குறிப்பிடலாம்;

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரை எல்லா தமிழ்ப் பகுதிகளினதும் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளும் அங்கு கூடியிருந்தனர். என்பதே அதுவாகும்.

வாழ்க ஒற்றுமை!

-செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரவேலில் புதிய அரசு அமைப்பது இழுபறி நிலையில்

டெல் அவிவ், ஏப்ரல் 16 இஸ்ரவேலில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் தொழிற்கட்சி தோல்வி அடைந்தது.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது, தொழிற்கட்சிக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறிய இரண்டு உறுப்பினர்கள் பின்னர் ஆதரவு கொடுக்கப்போவதில்லை என்று அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நம்பிக்கை வாக்கெடுப்பு நடாளுமன்றத்தில் இடம் பெறவில்லை.

இதேவேளை, புதிய அரசு அமைப்பதற்கு மேலும் கால அவகாசம் கோரி தொழிற் கட்சி ஜனாதிபதிக்கு விண்ணப்பிக்க இருப்பதாகக் கூறப்படுகின்றது. (எ)

## உளவுச் செய்மதி தயாரிப்பில் ஈராக் ஈடுபடுகிறதா?

லண்டன். ஏப் 16 உளவுச் செய்மதி ஒன்றைத் தயாரிக்கவே ஈராக் பிரிட்டனில் இருந்து அணு-ஆயுத உதிரிப்பாகங்களைக் கடத்திச் சென்றது என்பது தெரியவந்திருக்கின்றது.

அணு உதிரிப்பாகங்கள் சிலவற்றுடன் ஈராக் ராஜதந்திரி ஒருவர் அண்மையில் லண்டன் ஹீத்றோ விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டதும் பின்னர் அவர் நாடு கடத்தப்பட்டதும் தெரிந்ததே.

அதன் பின்னர் இடம் பெற்ற விசாரணையின் போதே முன் கண்ட தகவல் வெளியானது. (எ)

## முதலாம் வருட ஞாபக ஆராதனை



உதயம்: 07 - 06 - 1916

நித்திய இளைப்பாறுதல்: 19 - 04 - 1989

### அல்பிரட் கந்தையா செல்வத்துரை

''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு''

யோவான் 14 : 2

அன்னாரின் 1 ஆம் வருட ஞாபக ஆராதனை அவரது இல்லத்தில் நாளை 18 ஆம் திகதி காலை மு. ப 10.30 மணிக்கு நடைபெறும்.


மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''செல்வமியர்''
சங்கானை மேற்கு.
பண்டத்தரிப்பு.

(சி-4454)

அமரர் பொன். அபுகரத்தினம்
அவர்களின்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 29 08-1933 உதிர்வு: 18-03-1990

எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தியைச் செவிமடுத்து எம் இல்லம் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையம் வைத்து ஆறாத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்.

''ராஜ் மஹால்''
குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[3305]

# சுதந்திர பலஸ்தீனம் விரைவில் அமையும் என்று அரபாத்தகவல்

டியூனிஸ் ஏப் 16 விரைவில் சுதந்திர பலஸ்தீன நாடு ஏற்படும்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் இதனை டியூனிஸியா தலைநகரில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

ஜெருசலம் நகரில் உள்ள அல்டுலால் என்னுமிடத்தைத் தலை நகராகக் கொண்டு, சுதந்திர பலஸ்தீனம் அமைக்கப்படும் என்றும் அரபாத் தெரிவித்தார்.

மத்திய ஆசியாவின் தற்போதைய அரசியல் நிலைமை, பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சாதனைகள் பற்றி யாசிர் அரபாத் அந்த மாநாட்டில் விரிவாக எடுத்துச் சொன்னார்.

இம்மாநாடு சுதந்திர பலஸ்தீனத்தின் பொருளாதார எதிர்காலம் பற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பட்டது. (எ)

● ஜனதா நாடாளுமன்றக் குழு

## தலைவர் பதவியில் இருந்து தேவிலால் ராஜினாமா!

புதுடில்லி, ஏப்ரல் 16 இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள ஜனதாதள் குழுவின் தலைவர் பதவியில் இருந்து துணைப் பிரதமர் தேவிலால் ராஜினாமாச் செய்துள்ளார்.

ஒருவர் இரண்டு பதவிகளை வகிக்கக் கூடாது என்ற கொள்கைக்கு இணங்க தனது ராஜினாமா அமைவதாகதிரு தேவிலால் பிரதமர் வி. பி. சிங்குக்கு அனுப்பி உள்ளார் கடிதம் ஒன்றில் தெரிவித்தார் (எ)

## புதிய ஜனநாயகக்கட்சியின் ஆட்சி கிரீஸில் ஏற்பட்டது!

ஏதென்ஸ் ஏப் 12 கிரீஸ் நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சி 150 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

300 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை புதிய ஜனநாயகக் கட்சிக்கு இன்னும் ஓர் ஆசனம் தேவைப்படுகிறது.

இக்கட்சியில் இருந்து பிரிந்து சென்ற தலைவர் ஒருவரின் புதிய கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்து உள்ளது.

அந்தக் கட்சியுடன் கூட்டு அமைக்க புதிய ஜனநாயகக் கட்சி தீர்மானித்து உள்ளது. (எ)

★சோவியத் யூனியனில்

## பால்டிக் பொதுச் சந்தை; மூன்று குடியரசுகள் அமைத்தன

மாஸ்கோ ஏப் 16 பால்டிக் பொதுச் சந்தை ஒன்றை உருவாக்குவது என்று சோவியத் யூனியனில் உள்ள பால்டிக் குடியரசுகளான எஸ்தோனியா, லத்வியா, லித்துஏனியா ஆகியன தீர்மானித்துள்ளன. மூன்று குடியரசுகளின் பிரதமர்களும் இதுபற்றி பேச்சுக்கள் நடத்திய பின்னர் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

லித்துஏனியா தலைநகர் வில்நியஸில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஐரோப்பிய பொதுச்சந்தை போன்று இது அமையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)

## பிரதமர் பதவி விலகக்கோரி நேபாளத்தில் ஆர்ப்பாட்டம்

காத்மண்டு ஏப் 16 அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அரச தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்பாட்டம் நடத்தினர்.

பிரதமர் லோகேந்திரநாத் பகதூர் சன் பதவி விலக வேண்டும்; அனைத்துக் கட்சிகள் அங்கம் வகிக்கும் இடைக்கால அரசு அமைக்கப்படவேண்டும் என்று கோரி கோஷமிட்ட வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

அச்சமயத்தில் தலைமையகத்தில் பிரதமர் பகதூரும் நேபாள தேசிய காங்கிரஸ் தலைவர்களும் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்தனர். (எ)

★வடஇந்தியாவின்

## முக்கிய நகர்களில்பாதுகாப்பு பலப்படுத்த அரசு முடிவு!

புதுடில்லி ஏப்ரல் 16 வட இந்தியாவின் பிரதான நகரங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களைச் சமாளிக்கு முகமாக உஷார் நிலையில் இருக்கும்படி பாதுகாப்புப் படைகள் பணிக்கப்பட்டுள்ளன.

மத்திய உள்துறை அமைச்சர் முப்டி செய்யத் முகமது தலைமையில் நேற்று நடந்த உயர் மட்ட மாநாட்டில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது. (எ)

## பஞ்சாப்பில் கருத்துக் கணிப்பு நடத்த ஐ.நாவுக்கு விண்ணப்பம்

### அனுப்பப் போவதாக அகாலிதள் அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 16 பஞ்சாப்பில் சர்வசனவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையைக் கோரப் போவதாக அகலிதள் தலைவர்கள் சிம்ரஜித்மான் அறிவித்திருக்கிறார்.

இதனை பல அரசியல் கட்சிகள் கண்டித்து உள்ளன.

திரு. மான், அகலிதள் கட்சியின் சார்பில் பஞ்சாபில் இருந்து இந்திய நாடாளுமன்றத்துக்கு எம்பியாக கடந்த நவம்பர் தேர்தலில் தெரிவானார்.

திரு. மானின் அறிவிப்பை தேசத்துரோகச் செயல்என்று இந்திய மார்க்ஸியகம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

பாரதிய ஜனதாக்கட்சியும் மானின் அறிவிப்பு, பஞ்சாப் நிலைமையை மோசமாக்கும் என்று எச்சரித்தார். (எ)

காஷ்மீரில்

## ஊரடங்கை நீக்கக் கோரி டாக்டர்கள் பயமுறுத்தல்

ஜம்மு, ஏப் 16 காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் தொடர்ந்து பத்து நாட்களாக ஊரடங்குச் சட்டம் நீடிக்கிறது.

தீவிரவாதிகளைக் கைது செய்ய வீடு வீடாகத் தேடுதல் நடத்துவதில் இந்தியா இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அதற்கு ஏதுவாகவே ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது.

இதனால் காஷ்மீரின் பலபகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை நீக்கத் தவறினால் வேலை நிறுத்தம் செய்யப் போவதாத காஷ்மீரில்உள்ள அரசு டாக்டர்கள் அறிவித் துள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் காரணமாக சிகிச்சை பெறமுடியாது பல நோயாளர்கள் உயிரிழக்கின்றனர் என்று டாக்டர்கள் தெரிவித் துள்ளனர் (எ)

★ ஆஸாத் - காஷ்மீரில் உள்ள

## பாக். பயிற்சி முகாம்களை இந்தியஅரசு அழிக்க வேண்டும்

### பாரதிய ஜனதா கோரிக்கை

லக்னோ, ஏப்ரல் 16 பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள ஆஸாத்-காஷ்மீரில் உள்ள தீவிரவாத பயிற்சிமுகாம்களை இந்தியா அழிக்க வேண்டும்.

பாரதிய ஜனதாகட்சி இந்திய அரசுக்கு முன்கண்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

காஷ்மீரில் பாகிஸ்தானின் தலையீடு அதிகரித்து வருகிறது.

தலையீட்டை உடனடியாக நிறுத்தும்படி பாகிஸ்தானுக்கு மிகவும் கடுமையாக இந்தியா தெரிவிக்க வேண்டும்.

இது பலனளிக்காத பட்சத்தில் ஆஸாத்காஷ்மீரில் பாகிஸ்தான் நடத்தும் தீவிரவாத பயிற்சிமுகாம்களை இந்தியா அழிக்க வேண்டும்.

இப்படி பாரதிய ஜனதாக் கட்சித் துணைப் பொதுச் [illegible] ஜோஷி தெரிவித்தார். (எ)

### அமெரிக்காவுக்கு ரஷ்யாஎச்சரிக்கை

மாஸ்கோ, ஏப்ரல் 16 லித்துஏனியா மாநில பிரச்சினைகுறித்து அமெரிக்கா தலையீடு செய்வதை நிறுத்த வேண்டும் என்று சோவியத் யூனியன் எச்சரித்து உள்ளது.

லித்துஏனியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படுவது, மீண்டும் அமெரிக்க சோவியத் பனிப்போர் ஏற்[illegible] என்று கிரெம்ளின் அரசு நேற்று எச்சரித்தது. (எ)

### உலக அழகுராணியாக நோர்வே பெண்!

கலிபோர்னியோ, ஏப்ரல்16 உலக அழகுராணியாக நோர்வே அழகுராணி தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாம் இடம் அமெரிக்க அழகுராணிக்குக் கிடைத்தது.

கொலம்பியா அழகுராணிக்கு மூன்றாம் இடம் கிடைத்தது.

நேற்று நடந்த இப்போட்டியில் முதல் தடவையாக சோவியத் யூனியன் அழகுராணியும் கலந்துகொண்டார்.

உலக அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவருக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் டாலர் பணம் பரிசாக வழங்கப்பட்டது. (எ-க)

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி லக்சாயினி

பிரான்ஸ் நகரில் வாழும்
புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட
தவக்குமாரன் - நாகலெட்சுமி தம்பதிகளின்
செல்வக்குமாரி லக்சாயினி

தனது இரண்டாவது பிறந்தநாளை 17-04-1990ல் பிரான்சில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தங்கை சுகன்யா மற்றும் புங்குடுதீவு அப்பம்மா, தாத்தாமார், அம்மம்மா, பெரியம்மா, மைத்துனர், மைத்துனிமார், அன்ரி, சித்தப்பா, பிரான்ஸ் பெரியமாமி, பெரியமாமாமார், மைத்துனர்மார், மைத்துனிமார், சித்தப்பா, சித்தி, கனடா சின்னமாமி, சின்னமாமா, மைத்துனர்மார் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாய் வாழ வாழ்த்துகின்றார்கள்.

T. Thavakumaran,
32, BD. Staling Rod,
94600 Choisyle ROI
France.

[3301]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசரத்தினம் பிரிதிவிராஜ்

(கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

தோற்றம்: 07 - 06 - 1962

மறைவு: 01 - 04 - 1986 (லண்டன்)

திதி: 17 — 04 — 1990

வருடங்கள் நான்கது கடந்ததுவே
வசந்தங்களை அவை எமக்கு மறுத்தனவே
சோகங்கள் என்பதே இங்கு பெரும் சுமையாகி
வெறும் தேகங்கள் மட்டுமே இப்போ இங்கு
எண்ணங்கள் எப்போதும் உனைச் சுற்றியே
அவை எப்போதும் எப்போதும் கண்ணீர் சிந்துமே
சொந்தங்கள் ஈடாகுமோ வெறும்
சொத்துத்தான் ஈடாகுமோ?
பந்தங்கள் பாசங்களெல்லாம் இங்கு
பகட்டுக்காய் வந்து நிற்குதையா
வாழ்க்கை யென்பதே வெறுமையாகி - ஆனால்
இங்கு வாழ வேண்டு மென்பதே நியதியாகி
ஏதோ நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
இப்போதும் எப்போதும் உன் எண்ணங்களே
அவை எப்போதும் தப்பாது தரும் உன் நினைவுகளே
வேதனைகள் சோதனைகளைத்
தாங்கித் தாங்கி - இங்கு
வெந்து கொண்டு இருக்குதையா எங்களிதயம்
நீ எம்முடனிருந்து அந்த பசுமையான நாட்களே
இங்கு பரிதவிக்கும் எங்களுக்கு ஒரே ஆறுதல்

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆண்டவனை வேண்டும்

அப்பா, அம்மா, தங்கை.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

[சி-4291]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தவணை முதல்

# தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம்
# சிங்களப் பாடசாலைகளில் தமிழ்!

யாழ்ப்பாணம் ஏப் 17

இரண்டாம் தவணை முதல் 25 வீத தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழியும், 75 வீத சிங்களபாடசாலைகளில் தமிழ் மொழியும் போதிக்கப்படவிருக்கின்றன. இந்தத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு சிங்களமொழி கற்பிக்கப்படக் கூடிய தமிழ் ஆசிரியர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

கல்வி அமைச்சின் செயலாளர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளருடன் சங்கம் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சங்கத் தூதுக்குழுவினர் இந்தத் திட்டம் தமிழ் மொழிப் பாடசாலைகளில் மாத்திரம் சிங்கள மொழியை கற்பிப்பதாகவும் சிங்கள மொழிப்பாடசாலைகளில்எதுவும் நடைபெறாமல் இருக்கக் கூடியதாகவும் அமைந்ததால் விளைவுகள் பாரதூரமானவையாக முடியும் என்று செயலாளரிடம் தெரிவித்தனர்.

படிப்படியாக சம முக்கியத்துவம் கொடுத்து சகல பாடசாலைகளிலும் இரு மொழிகளையும் கற்பிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதாக செயலாளர் தெரிவித்தார். (உ-3)

நுவரெலியாவில்

## 12½ லட்சம் ரூபா செலவில் மின்தறி ஆலை அமைக்கஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17

மலையகத்தில் உள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நுவரெலியாவில் பாரிய மின்தறி ஆலை ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக ஈரோஸ் செயலதிபர் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

தேசிய பட்டியலில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினருக்கு பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாவில் 12½ லட்சம் ரூபா செலவில் இந்த மின்தறி ஆலை அமைக்கப்படும் என்றும், மீதியான பணம் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு செலவிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட 200 லட்சம் ரூபாவில் இவ்வருடம் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்த மதிப்பீடு இவ்வாரம் செயலகத்துக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-3)

## சாரதிகள் மீது பொலீஸ் கண்!

போக்குவரத்துக்கு இடைஞ்சலை உண்டுபண்ணும் தனியார் மற்றும் இ. போ. ச. பஸ் சாரதிகள் மீது பொலிஸார் இனிமேல் கடும் நடவடிக்கை எடுப்பர்.

பொலீஸ் தலைமைக்காரியாலயம் நாடு முழுவதிலும் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இது சம்பந்தமான பணிப்புரையை விடுத்துள்ளது.

தனியார் மற்றும் அரசு பஸ்களில் பணிபுரியும் சாரதிகளின் நடத்தை முறை போக்குவரத்துச் சீர்கேடுகளுக்கு இடமளிப்பதாக உள்ளது.

இதனை களைய கடும் நடவடிக்கை எடுப்பது என்று பொலீஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ஒ-எ)

## மாகாணசபை வசூலிக்கும் வரிகள் பற்றிய விவரம்

கொழும்பு, ஏப் 17

மாகாண சமைகள் அமுல் நடத்த வேண்டிய வரி வசூலிப்புப் பற்றிய நகல்சட்டம் எட்டு மாகாண முதலமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம். ஆர். பி. சல்காது அறிக்கையில் கூறப்பட்ட சிபார்சுகளின் அடிப்படையில் இந்த நகல் சட்டத்தைநிதிஆணைக்குழு தயாரித்து முதலமைச்சர்களுக்கு அனுப்பி வைத்திருகிறது.

நகல் சட்டத்தின் கீழ், மொத்த விற்பனை வரிகள், வீதி வரிகள், லைசென்ஸ் வரிகள் மற்றும் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய வரிகள் ஆகியவற்றை அறவிட மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு வழங்கும் நன்கொடைக்கு அதிகமாக வருமானத்தைப் பெருக்கக் கூடியதாக வரிவசூலிப்பு முறைகளை மாகாண சபைகள் அமுல் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படி மத்திய அரசின் நன்கொடைப் பணத்துக் அதிகமாக வரிகள் மூலம் கூடுதல் வருமானத்தைப் பெறும் மாகாண சபைக்கு மத்திய அரசு விசேட நன்கொடைகளைவழங்கவும் நிதி ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.


அளவெட்டி தெற்கு முத்துமாரி அம்பாள் ஆலய அதிஷ்டலாபச் சீட்டு இழுப்பின் முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம்: 1960
2 ஆம் பரிசு இலக்கம்: 906.
3 ஆம் பரிசு இலக்கம்: 1478.
4 ஆம் பரிசு இலக்கம்: 2495.
5 ஆம் பரிசு இலக்கம்: 2210.
6 ஆம் பரிசு இலக்கம்: 2751.
7 ஆம் பரிசு இலக்கம்: 301.
8 ஆம் பரிசு இலக்கம்: 1878.
9 ஆம் பரிசு இலக்கம்: 2770.
10 ஆம் பரிசு இலக்கம்: 639.

★ குறிப்பு: சீட்டுக்கள் இன்றி பரிசில்கள் வழங்கப்படமாட்டாது.

(12328) செ. இராசதுரை.


## திருமலை- - -

(1 ஆம் பக்க்த் தொடர்ச்கி)

நிலாவெளி, சாம்பல் தீவு, சல்லி, அல்லஸ் தோட்டம், வரோதய நகர், செல்வநாயகபுரம், பள்ளத்தோட்டம், அன்புவழிபுரம், பாரதிபுரம், பாலையூற்று, லிங்கநகர், திருக்கடலூர், வீரநகர், உவர்மலை ஆகிய கிராமங்களில் உண்ணாவிரதமும் ஊர்வலங்களும், கலை நிகழ்ச்சிகளும்நடத்தப்பட்டுள்ளன. (ஒ-1 50

## வவுனியா- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களில் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதம், அஞ்சலி உரைகள், கவிதாஞ்சலி என்பன நடைபெற்றன.

இதேவேளை 19 ஆம் திகதி எழுச்சி விழாவை வவுனியா நகரசபை மைதானத்தில் நடத்துவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மைதானத்தில் வளர்ந்துள்ள புல் முதலியவற்றை வெட்டிச் சுத்தம் செய்வதில் நகரசபை ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த ஏழு வருடங்களாக நகரசபை கட்டடம் இராணுவ நடவடிக்கைத் தேவைகளுக்கும், பொலீஸ் பகுதியினரின் தேவைக்கும் பயன்படுத்தத் தொடங்கியதையடுத்து இந்த பொது மைதானம் பொது மக்களின் பாவனைக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-164)

## இயக்கச்சி தடைமுகாம்

ஒட்டுசுட்டான் ஏப்ரல் 17

இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு விலகிய பின்பு இயக்கச்சியில் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள், தடைமுகாம் அமைத்துள்ளனர்.

மண் மூட்டைகளினால் சென்றிகளும், அமைக்கப்பட்டுள்ளன.

(இ - 113)

## ஆலயத்தில் தங்க நகை

வல்வெட்டித்துறை, ஏப் 17

புத்தாண்டு தினத்தன்று செல்வச்சந்நிதி ஆலய வீதியில் தங்க ஆபரணம் ஒன்றும் சிறு தொகைப் பணமும்கண்டெடுக்கப்பட்டன.

இவை செல்வச்சந்நிதிகலாமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-160]

## இயங்க தொடங்கியது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

யாழ், செயலகத்தில் பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் ஏற்கும் பிரிவு நேற்று இயங்க ஆரம்பித்தது.

நேற்று சுமார் பத்துப்பேர் வரையில் விண்ணப்பங்களைக் கையளித்ததாக அந்தப்பிரிவு அதிகாரி தகவல் தந்தார்.

## நெடுந்தீவில் உண்ணா விரதம்

நெடுந்தீவு, ஏப்ரல் 17

அன்னை பூபதியின் நினைவாக நெடுந்தீவில் நேற்றுப் பரவலாக உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

## வட-கிழக்கை- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் பல வெளிநாடுகள் தெரிவித்திருக்கின்றன. நிதி வழங்கக் காத்தும் இருக்கின்றன.

★ வாக்குறுதி அளித்திருக்கும் நாடுகள் நிதி உதவி வழங்குமானால், வடக்கு - கிழக்கு மாகாணத்தை அழிந்த பிரதேசம் என்ற நிலையிலிருந்து மாற்றி வளம் கொழிக்கும் பூமியாக்கலாம். பல விவசாய, கைத்தொழில், மீன்பிடி வளர்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்க முடியும் (அ-2)

## பேச்சுக்குமுன்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

எமக்கு எட்டிய அறிவின் அடிப்படையில் இந்த 19 அம்சத் திட்டம், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக் காணக்கூடிய விதத்தில் – இது சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்வதுடன் – தீர்வுக்கான நேர்வழிகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த 19 அம்சத் திட்டத்தை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது ஓர் அரசியல் தந்திரம் அல்ல. அது சகல இனங்களினதும் சுயகௌரவத்துடன் கூடிய – கவனமாகத் தேசத்தைக் காப்பாற்றக் கூடிய – ஒரு முயற்சி தான்.

இந்தத் திட்டம் தீவிரமானதும், கூர்மையானதுமான பேச்சுக்களுக்கு ஒரு விரும்பத்தகாத முன் நிபந்தனை அல்ல. ஒரு நல்ல, விரும்பத்தக்க ஆரம்ப அடிப்படையே – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பதிவாளர் நாயக யாழ். கிளை மூடப்படும் அபாயம்

யாழ்ப்பாணம் ஏப் 17

கொழும்பு பதிவாளர் நாயகம் வாரத்துக்கு பிறப்புச் சான்றிதழ் பிரதி வழங்கும் 25 புத்தகங்களையாவது வழங்காது விட்டால் யாழ்க் கிளையை மூட வேண்டிய சூழ்நிலை உருவாகி விடும். இப்படி கொழும்பு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் - பதிவாளர் பிரிவில் 25 ஆயிரத்துக்கும் மேல் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

ஆனால் பிரதி வழங்கும் புத்தகங்களுக்கு கொழும்புக்குச் சென்றால் சாக்குப் போக்கு சொல்லி குறைந்த அளவிலான புத்தகங்களையே கொடுக்கிறார்கள் என்றும் சில சமயங்களில் ஒரு புத்தகமும் கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் புத்தகங்கள் இல்லாததால் இங்கு விண்ணப்பங்கள் தேங்கி கிடக்கின்றன.

கடந்த வாரம் இந்தப் புத்தகங்களை எடுக்கச் சென்ற அதிகாரிகள் கொழும்பில் இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் இல்லாததால் வெறுங் கையோடு யாழ்ப்பாணம் திரும்ப வேண்டியதாயிற்று.

கிழமைக்கு 25 புத்தகங்களையாவது யாழ் கிளைக்கு ரயில் மூலம் அனுப்பும்படி கொழும்பில் கடிதம் கொடுத்து விட்டு இந்த அதிகாரிகள் திரும்பி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புத்தகங்கள் வராவிட்டால் இந்த பிரிவு இங்கு இயங்கியும் பலன் இல்லாது விடும் என்று அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். (இ-3)

# அரச நிறுவனங்களின் குறைகள் பிரச்சினைகளை தீர்க்க விசேட குழு

## எட்டுமாகாணங்களுக்கும் நேற்றுப் புறப்பாடு

கொழும்பு, ஏப் 17

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களில் காணப்படும் பிரச்சினைகள், குறைகள் குறித்து விசாரணை செய்து அங்கங்கேயே அந்தப் பிரச்சினைளைத் தீர்க்க மாகாணத்துக்கு ஒன்றாக உயரதிகாரிகளைக் கொண்ட எட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குழுக்களைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட மாகாணங்களுக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென்றனர்.

இந்தத் தகவலை பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டல் பெரேரா உதயனுக்குத் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்துக்கு கீழ் உள்ள அரச திணைக்களங்கள் மட்டுமல்லாது மாகாணசபைகளின் கீழ் உள்ள திணைக்களங்கள், சபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றிலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்தக் குழுக்கள் முயற்சி எடுக்கும்.

ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள ஊழியர் பற்றாக்குறை, மேலதிக ஊழியர்கள், இடமாற்றல் பிரச்சினை, நிர்வாக மொழிப் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்தக் குழு சிரத்தை எடுக்கும்.

முடிந்தவரை பிரச்சினைகளை அங்கங்கேயே தீர்க்க குழு முயற்சிக்கும். தீர்க்க முடியாத பிரச்சினைகள் ஏற்பட்டால் குழு அதுகுறித்து அமைச்சுக்கு விளக்கமாக அறிக்கை சமர்ப்பிக்கும்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சு நடவடிக்கை எடுக்கும் - இப்படி அமைச்சர் திரு. பெஸ்டல் பெரேரா மேலும் தெரிவித்தார். (உ-2)

## ஈரோஸ் எம். பிக்கள் ஏன் ராஜினாமா செய்யவில்லை?

### செயலதிபர் பாலகுமாரன் விளக்கம்

யாழ்ப்பாணம் ஏப் 17

ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் நாடாளுமன்றப் பதவிகளை ராஜினாமாச் செய்யவில்லை என்பது குறித்து ஈரோஸ் செயலதிபர் திரு. வே. பாலகுமாரன் விளக்கம் தெரிவித்தார்.

உதயன் செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

இடைக்கால ஏற்பாடாகத் தான் நாம் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டோம் மக்கள் ஆதரவால் வெற்றி பெற்றோம். தேர்தலில் தில்லுமுல்லுகள் ஏற்பட்டிருந்தபோதும் மக்கள் இட்ட ஆணையை ஏற்று நாடாளுமன்றம் சென்றோம்.

புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எமக்கு எம் பி. பதவியில் இருக்க ஆசையில்லை.

நாம் பதவிகளை ராஜினாமாச் செய்தால் தேவையற்ற சக்திகள் அப் பதவிகளைப் பெற்றுவிடும்

ஆறாவது திருத்தச் சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தில் வரும்போது அதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுக்களை அடுத்து நாடாளுமன்றத்தில் பல சட்ட யாப்புகளில் திருத்தம் கொண்டுவரப்படும். அதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இந்தக் காரணங்களுக்காகவே நாம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்யவில்லை.

இப்படி அவர் விளக்கமளித்தார். (க-3)

## ஆசிய அபிவிருத்தி வங்கிக் கூட்டம்

கொழும்பு, ஏப் 17

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் மே 2ஆம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகிறது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கைத்தூதுக் குழுவுக்கு பிரதமர்டி.பி.விஜேதுங்க, நிதி அமைச்சர் என்ற முறையில் தலைமை வகிக்கிறார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்கள் சபைக் கூட்டம் மே 4ஆம் திகதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [இ-எ]

## கப்பல்சேவை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை எந்நேரமும் உடனடியாக ஆரம்பிக்கப்படலாம் அதற்கான ஏற்பாடுகள் இன்னும் பூரணமாக்கப்படவில்லை ஆகையால் எஞ்சியுள்ள ஒழுங்குகளை தற்காலிக அடிப்படையிலாவது செய்யவேண்டி உளது. அதற்காகவே நாளைய மாநாடு நடக்கிறது – என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-9)

## மினிவான். . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி, வி. கிருபாகரன் வயது 13) சாவகச்சேரி, சின்னப்பு வைரமுத்து (வயது 50,) வெள்ளையன் தெய்வமலர் (வயது 28) கைதடி,

எம் சனிசியஸ் (வயது 13) யாழ்ப்பாணம், திருமதி வடிவழகி சுப்பிரமணியம் (வயது 35) யாழ்ப்பாணம். சின்னையா செல்வத்துரை (வயது 58) சங்கத்தானை, புஷ்பராஜா உதயம் (வயது 32) கைதடி, கமலாதேவி மகேந்திரன் (வயது 57) நுணாவில், துரைச்சாமி இராமச்சந்திரன் (வயது 45) சாவகச்சேரி.

மேலும் ஒருவர் மயக்க நிலையில் உள்ளார். அவரது பெயர் விவரம் தெரியவில்லை. [ஒ-9]

## கொள்ளையர்

வெற்றிலைக்கேணி, ஏப் 17

வெற்றிலைக்கேணி கிராம சேவை அலுவலர் பிரிவினுள் அடங்கும் மண்டலாய்க்கட்டு எனும்பகுதியில் கொள்ளையர் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. (இ-ரி)

## நாடக போட்டியில் முதல் பரிசு

யாழ்ப்பாணம் ஏப் 17

நோர்வேயின் ஒஸ்லோ தமிழ்நாதம் வானொலி நிலையம் நடத்திய வானொலி நாடகப் போட்டியில் பிரபல நாடக ஆசிரியர் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை முதலாம் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் 20 க்கு மேற்பட்ட மேடை நாடகங்களையும் 150 வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் ஒரு சிறுகதை எழுத்தாளரும் ஆவார். (க) [ஒ-1 1]




# அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்

தமிழன் தலை நிமிர வைத்த
தாயே — அன்னை பூபதியே!
நீ செய்த தியாகங்கள் தான் எத்தனையோ?
நீ கண்டு கொண்ட மன வெண்ணம்
நிறைவுபெற உழைக்கின்றோம் — தாயே!

தாயே! அன்னை பூபதியே!
தூயோய் நின் நாமம்
சுடராய் வழி காட்டும்
புதிய யுகம் படைக்க
புத்தெண்ணம் வெளிவர

உன்னை எங்கள் உள்ளத்தினுள் இருத்தி அஞ்சலிகள் செலுத்துகின்றோம்!

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

[ஒ-4292]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவு வாடகைக்கு பெற

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

17 - 04 - 1990 செவ்வாய்க்கிழமை

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## அரசு - மாகாணசபைகள் இடையே உறவைப் பலப்படுத்த நடவடிக்கை

### திட்டங்கள் ஒரு வாரத்தில் வெளிவரும் என்று பெஸ்டஸ் தகவல்

கொழும்பு, ஏப். 17

மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தத் திட்டங்கள் இன்னும் ஒருவார காலத்துக்குள் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

மாகாண சபைகள் நிர்வாகத்தில் காணப்படும் சிக்கல்களை நீக்குவது, மாகாண சபைகளின் அதிகார வரம்புகள், பொது நிர்வாகத்துறை ஊழியர்களின் நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தத் திட்டங்களில் விரிவாக தெளிவுபடுத்தப்படும் என்று அறியப்படுகிறது.

மாகாண சபைகள் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்தும் விதத்தில் இந்த அறிவிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-2)

## மாநாடு நடந்த வேளை திடீரென கட்டடத்தில் தீ!

### அணைக்கும் முயற்சியில் படையினர்

புதுடில்லி ஏப்ரல் 17

புதுடில்லியில் உள்ள பிரபல விஞ்ஞான பவன் கட்டடத்தில் நேற்றுப் பிற்பகல் மூண்ட தீ மாலைவரை அணைக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

கட்டடத்தில் தீபிடித்துக் கொண்ட சமயம் அங்கு இரண்டு உயர் அரசு மாநாடுகள் நடந்துகொண்டிருந்தன. மாநிலச் செய்தித்துறைச் செயலர்கள் மாநாடும் பொலீஸ் உயர் அதிகாரிகள் மாநாடுமே அவையாகும்.

தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடியும் தீயை அணைக்க முடியாதிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தீப்பிடித்ததற்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. (ஒ-எ)

## பயிலுநர் ஆசிரியர் சம்பளம்: அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரப் 17

பயிலுநர் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை உடனடியாக அதிகரிக்கும்படி அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

பயிலுநர் ஆசிரியருக்கு மாதம் ஆயிரம் ருபா அலவன்ஸாக வழங்குவது போதாது.

ஆசிரியப்பணிக்குத் தேவையான வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க இந்தப்பணம் காணாது.

- இப்படி சங்கம் அமைச்சருக்கு அனுப்பி உள்ள மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

### சென். ஜோன்ஸுடனான மோதல்

## யாழ். இந்து 286 ஓட்டங்கள் இன்று போட்டி தொடரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

சென்ஜோன்ஸ் கல்லூரியுடன் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி அணி தனதுமுதல் இன்னிங்சில் 286 ஓட்டங்களைப்பெற்று ஸ்திரநிலையில் உள்ளது.

யாழ் இந்து மைதானத்தில் நேற்று மாலை 2மணிக்கு இப்போட்டி ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துஅணி நேற்றைய ஆட்ட முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 286 ஓட்டங்களைப்பெற்றநிலையில் ஆட்டத்தைநிறுத்திக்கொண்டது.

கோபிராஜ் 73, ராஜசேகர் 46, கபிலன் 43, ஆர். வரதன் 40, நரேந்திரன் 24, வரதன் 20, ஜெயராஜ் 17 ஓட்டங்களைப் பெற்றனர், பிரசாந்தன் 4 விக்கெட்டுகளையும், சதீசன் 3 விக்கெட்டுகளையும், அஜித் லக்ஸ்மன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டத்தில் யாழ் இந்து அணியினர் ஆரம்பத்தில் வெகுவிரைவாக ஓட்டங்களை எடுத்து ஆடினர், இப்போட்டியை ரசிக்க பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.

இன்றைய ஆட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும், (இ-மு)

## இந்திய அணியில் மீண்டும் ஸ்ரீகாந்த், ரவிசாஸ்திரி!

புதுடில்லி, ஏப்ரல் 17

மீண்டும் இந்தியக் கிரிக்கெட் அணியில் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், ரவிசாஸ்திரி ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீகாந்துக்கு கப்டன் பதவி மீண்டும் வழங்கப்படவில்லை.

முகம்மது அஸாருதீனே தொடர்ந்தும் கப்டனாக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஷார்ஜாவில் நடைபெறும் ''ஒஸ்ட்ரலேஷியா'' கிண்ண கிரிக்கெட் போட்டியில்கலந்து கொள்ளும் இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணியின் விவரம் வருமாறு:-

- ★ முகமது அஸாருதீன் -- கப்டன்
- ★ கிரன் மோரே -- உதவி கப்டன்
- ★ நவ்ஜோத் சித்து
- ★ கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்
- ★ சஞ்சய் மஞ்ரேகர்
- ★ டெண்டுல்கர்
- ★ டபிள்யு. வி. ராமன்
- ★ கபில்தேவ்
- ★ மனோஜ் பிரபாகர்
- ★ அப்துல் வாஸம்
- ★ சஞ்சீவ் சர்மா
- ★ வெங்கடேபதி ராஜு
- ★ அனில் காம்லே
- ★ ரவிசாஸ்திரி (உ-எ)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

15-04-1990 இல் கொக்குவில் கிழக்கு மகமாயி சனசமூக நிலைய கட்டிட நிதிக்கான சீட்டிழுப்பு இனிது நடந்தேறியது. அதற்குரிய பரிசில்கள் பெற்ற அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்கள் பின்வருமாறு:-

முதலாம் பரிசு — 931
இரண்டாம் பரிசு — 87
மூன்றாம் பரிசு — 871
ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள்:
1401, 1360, 837.

மகமாயி சன சமூக நிலையம்,
கொக்குவில் கிழக்கு.

[12929]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பாகிஸ்தான் நாசகாரி கப்பல் கொழும்பில்!

பாகிஸ்தான் கடற்படை நாசகாரிக் கப்பல் 'மாஓவின்' கொழும்புத் துறைமுகத்துக்கு சென்ற 15ஆம் திகதி வந்து சேர்ந்தது.

15ஆயிரத்து 380 தொன் எடையுள்ள இக்கப்பலில் 19 அதிகாரிகளும் 270 சிப்பாய்களும் பணி புரிகின்றனர்.

சென்ற முதலாம் திகதி சுபிக் வளைகுடாவில் இருந்து இக்கப்பல் புறப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து நேற்று (திங்கள்) புறப்படவிருந்த இக்கப்பல் கராச்சியை இம்மாதம் 23ஆம் திகதி சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## எரிபொருளுடன் மேலும் இரு ரயில்கள்

யாழ்ப்பாணம் ஏப் 17

இரு எரிபொருள் ரயில்கள் இன்று வந்து சேர இருக்கின்றன. இவை வந்து சேர்ந்ததும் எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை பெற்றோலியக் கூட்டுஸ்தாபன வட பிரதேச முகாமையாளர் திரு. எஸ். சிவஞானம் தெரிவித்தார்.

இன்று காலை 1லட்சத்து 35 ஆயிரம் லீட்டர் டீசலும் 45 ஆயிரம்லீட்டர் மண்ணெண்ணெய்யும் வந்து சேரும். இரவு வரும் ரயிலில் 71 ஆயிரம் லீட்டர் பெற்றோல் வந்து சேரும்.

ரயில்கள் வந்தவுடன் எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வோம். இவை வந்து சேர்ந்ததும் எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என அவர் தெரிவித்தார். (இ-3)

## இந்திய பத்திரிகையாளர்

''ரைம் ஓவ் இந்தியா'' பத்திரிகை செய்தியாளர் செல்வி சீமா குகா நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

## சந்திரிகாவுக்கு அழைப்பு இல்லை!

கொழும்பு, ஏப் 17

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு எதுவும் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு கிடைக்கவில்லை.

ஆகவே அக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளப்போவது இல்லை என்று ஸ்ரீலங்கா மக்கள் கட்சி(வி பிரிவு)ப் பொதுச் செயலாளர் டாக்டர் ராஜிதா சேனரத்னா தெரிவித்தார். [ஒ-எ]

## அரபாத்தை நாடாளுமன்றில் பேச அழைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 17

இலங்கைக்கு விஜயம் செய்யும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்த அழைக்கப்படவேண்டும்

சர்வதேச இஸ்லாமிய இளைஞர் சம்மேளனத்தின் இலங்கைப் பிரிவு முன்கண்ட வேண்டுகோளை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் ஆகியோருக்கு விடுத்துள்ளது.

யாசிர் அரபாத்துக்கு கொழும்பு மாநகரசபை பொது வரவேற்பு அளித்துக் கௌரவிக்க வேண்டும் என்றும் இந்த அமைப்பு கொழும்பு மேயரைக் கேட்டுள்ளது. (இ-எ)

## கொழும்பு சென்ற பஸ் விபத்தில்; ஒருவர் பலி

பச்சிலைப்பள்ளி, ஏப். 17

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று வீதியில் திருத்தவேலை நடைபெற்றுக்கொண்டிருந்த வாகனம்மீது மோதியதால் ஒருவர் பலியானதுடன் நால்வர் காயமடைந்தனர்.

இறந்தவர் ''மெக்கானிக்'' என்று அறியவருகிறது

இச்சம்பவம் நேற்று முன்தினம் (ஞாயிறு) இரவு மிருசுவில் பழைய வாய்க்கால் சந்தியில் இடம்பெற்றது.

காயமடைந்த நால்வரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். [ஒ-117]

## சுன்னாகம் மக்கள் வங்கியில் புத்தாண்டு கைவிசேட வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

மக்கள்வங்கிஆண்டுதோறும் வழமையாக நடத்திவரும் புத்தாண்டு கைவிசேட வைபவம் வங்கியின் சுன்னாகம் கிளையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

மக்கள்வங்கி பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. என். எஸ். பி. ஆனந்தன், யாழ். பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம், யாழ் மாவட்ட தேசிய பேரவை உறுப்பினர் திரு. சி. சிவமகாராசா, உதவி அரசாங்க அதிபர் திரு. இராசையா, சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேலு மற்றும் வாடிக்கையாளர்கள், வாடிக்கையாளர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர்:

1987ஆம் ஆண்டுக் கலவரங்களின்போது பலத்த சேதமடைந்த வங்கியின் கிளையலுவலகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளரால் திறந்துவைக்கப்பட்டது.

பிரதேச முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம் சிறப்புரையாற்றினார். சமூகமளித்திருந்த வாடிக்கையாளர் சார்பில்பண்டிதர் இ. திருநாவுக்கரசு சுன்னாகம் மக்கள் வங்கியின் சேவையைப் பாராட்டிப் பேசினார். வங்கியின் சார்பாக வங்கி உத்தியோகத்தர் திரு. பொ. [illegible] நன்றி தெரிவித்துப் பேசினார். (இ)

## 6 ஆவது திருத்தம் ரத்தானால் தான் புலிகள் தேர்தலில் பங்குபற்றுவர்

### ஆலோசகர் பாலசிங்கம் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 17

அரசியல் சாசனத்தில் இருந்து ஆறாவது திருத்தம் ரத்துச் செய்யப்பட்டால் மட்டுமே விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்கு பற்றுவார்கள். இல்லாவிடில் தேர்தலில் புலிகள் பங்குபற்ற மாட்டார்கள்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'சண்டே' ஆங்கில வார இதழுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: வடக்கு, கிழக்கு நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது என்று சொல்வது சரியா?

பதில்: இல்லை இலங்கை அரசுதான் இப்பகுதியை நிர்வகிக்கிறது. எமக்கு என்று சொந்த அமைப்புக்கள் உள்ளன. அமைதி, சகஜ நிலையைக் கொண்டு வர எம் அமைப்புக்கள் அரசுடன் ஒத்துழைக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிர்வகித்து வந்தவர்கள் ஓடிவிட்டார்கள். இப்போது இடைவெளி ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த இடைவெளியை நிரப்ப அரசு மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தலை நடத்த வேண்டும்.

கேள்வி: ஆயுதங்களை கீழே வைக்க விடுதலைப் புலிகள் ஏன் முன்வருகிறார்கள் இல்லை? தேர்தலில் போட்டியிட்டு அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளத் தயார் என்று கூறும் போது, ஆயுதங்களைக் களைய மறுப்பது தர்க்கத்துக்கு ஏற்றதாக இல்லையே!

பதில்: தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை — தமிழர்களின் பாதுகாப்பு பந்தோபஸ்து உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது என்று நாம் கருதும் வரை — நாம் ஆயுதங்களை ஒப்படைக்கப் போவது இல்லை.

புதிதாகத் தேர்தல்களை நடத்துவதற்கு இது முட்டுக்கட்டையாக இருக்காது.

கேள்வி; ஆறாவது திருத்தம் அரசியல் சாசனத்தில் இருந்து ரத்துச் செய்யப்படாவிட்டாலும் விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிடுவார்களா?

பதில்: மக்கள் தங்கள் அரசியல் எண்ணங்களை வெளியிடுவதைத் தடுப்பதற்காகவே இச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந்த 6 ஆவது திருத்தம் எமது மக்களை அரசியலில் இருந்தும் அரசமைப்பு நீரோட்டத்தில் இருந்தும் தனியாக பிரித்து வைத்துவிட்டது.

இந்த 6ஆவது திருத்தம் பிரிவினைப் போராட்டத்தை துரிதப்படுத்தியதே ஒழிய, கட்டுப்படுத்தவில்லை.

எமது அரசியல் அபிப்பிராயங்களை வெளியிட தடையாக உள்ள சட்ட ரீதியான கட்டுப்பாடுகளை நாம் விரும்பவில்லை.

ஆறாவது திருத்தம் ரத்துச் செய்யப்படா விட்டால் நாம் தேர்தலில் பங்குபற்ற மாட்டோம்.

கேள்வி; ஈழம் கோரிக்கையை முற்றாகக் கைவிட்டுவிட்டீர்களா?

பதில்: (சிரித்தபடி) நாம் இப்போது ஈழம் என்ற வார்த்தையை பாவிப்பது இல்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

நாம் சுயநிர்ணய உரிமை பற்றியே பேசுகின்றோம். அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளவே விரும்புகிறோம். அது பற்றி நாம் தீவிரமாக இருக்கின்றோம்.

அரசின் அணுகுமுறையில் தான் அனைத்துமே தங்கியுள்ளது.

அரசு எடுக்கும் நடவடிக்கைகளை நாம் பார்த்துக் கொண்டும், காத்துக் கொண்டும் இருக்கின்றோம்.

எதிர்காலத்தில் அரசு எடுக்கப்போகும் நிலைப்பாட்டைப் பொறுத்தே எமது எதிர்கால நிலைப்பாடும் அமையும்.

கேள்வி: நீங்கள் விரும்புவதை அரசு தரும் என்று நீங்கள் உண்மையாகவே நம்புகிறீர்களா?

பதில்: நல்லது. ஜனாதிபதி பிரேமதாஸ புதிய அணுகுமுறை ஒன்றை கையாள்கிறார்.

ஒரு போதும் இராணுவ அணுகுமுறையைக் கையாளப்போவது இல்லை என்று அவர் எமக்குக் கூறியிருக்கிறார்.

பேச்சுக்கள் மூலம் எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அவர் உண்மையாக ஒவ்வொரு முயற்சியும் எடுத்து வருகிறார். நாம் அவரை நம்புகிறோம்.

## கடற்படை சிப்பாயின் புத்தாண்டுக் கொலை!

கொழும்பு, ஏப். 17

கற்பிட்டி கடற்படை முகாமில் புத்தாண்டு தினத்தன்று சிப்பாய்கள் இருவருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து ஒரு சிப்பாய் மற்றவரை நோக்கித் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

இதனால் சூடுபட்ட சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அருகில் நின்ற மற்றொரு சிப்பாய் காயமுற்றார். (உ)

### செய்திச் சாரம்

## நேபாள நாடாளுமன்றம் கலைப்பு!

காத்மாண்டு, ஏப். 17

நேபாள நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டது.

இதனை மன்னர் பிரேந்திரா தனது வானொலி உரையில் அறிவித்தார்.

இதனிடையில் ஜனநாயகக் கிளர்ச்சியை முன்னின்றுநடத்திய நேபாள தேசிய காங்கிரஸ் தலைவர் கணேஷ்வர்மானை மன்னர் தனது அரண்மனைக்கு அழைத்துப் பேச்சுக்கள் நடத்தினார்,

இதேவேளை --

புதிய அரசு ஒன்றை இடதுசாரிகளின் ஒத்துழைப்புடன் அமைக்கும்படி நேபாள தேசிய காங்கிரஸை மன்னர் பிரேந்திரா நேற்று அழைத்தார். [ஒ-எ]

## அர்ஜுனா மீண்டும் காப்டன்!

கொழும்பு, ஏப். 17

ஷார்ஜாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில்கலந்து கொள்ளும் இலங்கை அணிக்கு காப்டனாக அர்ஜுன ரணதுங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இலங்கையும் இந்தியாவும் மோதுகின்றன. [உ-எ]

## அபராதம்

கொழும்பு, ஏப் 17

பெண்கள் அணியும் 160 கைக் கடிகாரங்களை நாட்டுக்குள் கடத்த முயற்சித்த நபர் ஒருவருக்கு சுங்கத் திணைக்களம் மூன்றேகால் லட்சம் ரூபா அபராதம் விதித்தது. (இ-எ]

## ஜல்லிக்கட்டு: நால்வர் பலி!

மதுரை, ஏப் 17

மதுரை மாவட்டத்தில் உள்ள காரடிக்காலில் நடந்த ஜல்லிக்கட்டு விளையாட்டு நெரிசலில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

அந்த ஊர் கோயில் விழாவின் போது இந்தச் சம்பவம் ஏற்பட்டது. (ஒ-எ)

## இளைஞர் கிராமங்கள்

கொழும்பு, ஏப் 17

ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர் கிராமங்கள் நிறுவப்படவுள்ளன.

யொவன்புர இளைஞர் முகாமுக்குச் செலவழித்தது போக எஞ்சியிருக்கும் நிதி இந்த இளைஞர்கிராமங்களை அமைக்கப்பயன்படுத்தப்படும் என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ தெரிவித்தார்.

இளைஞர் கழகங்களில் இருந்து தகுதியான இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு இக்கிராமங்களில் குடியமர்த்தப்படுவர்.

## மரண அறிவித்தல்

திருமதி
மேரிப்பிள்ளை மனுவேற்பிள்ளை

திருமதி மேரிப்பிள்ளை மனுவேற்பிள்ளை காலமானார்.

அன்னார் காலம்சென்ற திரு. மனுவேற்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும், திரு. அன்ரனிப்பிள்ளை (பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா, கொழும்பு), வுளோறன்ஸ் அனி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மல்லிகா அன்ரனிப்பிள்ளையின் அன்பு மாமியாரும், திரு. ஞானப்பிரகாசம் (உரிமையாளர், ஹோம் டி நீட்ஸ், ஊர்காவற்றுறை), திருமதி சுகந்தி (மரினா) ஞானப்பிரகாசம், செல்வி ரதனிக்கா (விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), செல்வன் ரவீந்திரா (அவுஸ்திரேலியா), செல்வன் விஜயேந்திரா (சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலம்சென்ற திரு. முத்தையா, காலம்சென்ற திருமதி எலிசபேத், காலம்சென்ற திரு. அல்பிறேற் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 18-04-1990 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஞானப்பிரகாசம்

'சுகந்த விலாஸ்'
பெரியபுலம் சந்தி,
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

[12930]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org